கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

அருப்புக்கோட்டை.

அசல் வழக்கு எண். 230/2012

**வா.சா.3-** குறுக்கு விசாரணை - நாள் 27-06-2025.

பெயர் = ராஜன்

**வா.சா.-3** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி 1,3 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.-

(1) தாவா வழக்கில் 2 ம் வாதி சுமதி என்னுடைய மனைவி என்றால் சரிதான். 1,3,4 ம் வாதிகள் தற்போது தாவா வழக்கை நடத்த முன்வரவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. Ex.A1 ஆன 30.08.1999 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தை யார் கிரையம் வாங்கினார்கள் என்றால் 2 ம் வாதி சுமதி. Ex.A1 பத்திரத்தை யார் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் 3 ம் பிரதிவாதி ஜெயராணி . மேற்படி Ex.A1 ல் நான்குமாலில் என் கைவசம் உள்ள நிலத்திற்கும், கிழமேல் பாதைக்கும் தெற்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். Ex.A1 பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளனா என்றால் இல்லை. Ex.A1 பத்திரம் எழுதுவதற்கு நான் சென்றிருந்தனா என்றால் ஆமாம், சென்றிருந்தேன். Ex.A1 பத்திரத்தை எழுதுவதற்கு சங்கதிகளை கூறியது யார் என்றால் 3 ம் பிரதிவாதி ஜெயராணியின் அப்பா.

(2) நான்குமால் எல்கைகள் கூறியது ஜெயராணியின் அப்பாதான் என்றால் சரிதான். ஜெயராணியின் அப்பா பெயர் என்ன என்றால் எனக்கு சரியாக நியாபகம் இல்லை. Ex.A1 பத்திரம் எழுதுவதற்கு ஜெயராணியின் அப்பா வந்திருந்தாரா என்றால் வந்திருந்தார். கிழமேல் பாதைக்கு தெற்கு என்று குறிப்பிட்டு, எத்தனை அடி பாதை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி பாதை, நடைபாதையா அல்லது வண்டிபாதையா என்ற விளக்கம் Ex.A1 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நாங்கள் தாவா சொத்திற்கு தெற்கேயுள்ள சொத்தை காலிமனையாக கிரையம் வாங்கி அதில் வீடு கட்டினோம் என்றால் சரிதான். மேற்படி பாதையில் நாங்கள் நடந்து செல்வதற்கு பிரதிவாதிகள் தரப்பில் ஏதேனும் தொந்தரவு செய்தார்களா என்றால் நடந்து போவதற்கு தொந்தரவு செய்யவில்லை. எங்களது ஊரில் எங்களது வீடு ஊருக்கு மேற்கே கடைசியாக உள்ளது என்றால் சரிதான். எங்களது வீட்டிற்கு முன்பு காலிஇடமாக உள்ளதா அல்லது தெரு உள்ளதா என்றால் தெரு உள்ளது. எங்களது வீடு கிழமேல் 41 அடியும், தென்வடல் 44 அடியும் என்றால் சரிதான். எங்களது வீடு கிழமேல் 41 அடிக்கு முன்பு தெரு என்று எங்கே குறிப்பிட்டுள்ளது என்றால் எனது பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது, ஆனால் அது நத்தம் புறம்போக்கு. எங்களது வீட்டிற்கு முன்பு உள்ள இடத்திற்கு நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால்., சரிதான். அதற்கு கிழக்கே உள்ள இடத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், மேற்படி இடம் அரசாங்க ஆவணத்தில் தெருவாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது, ஆனால் எங்களை மேற்படி இடத்தில் வண்டியில் செல்வதற்கு 1 ம் பிரதிவாதி அனுமதிப்பதில்லை. மேற்படி இடம் அரசு ஆவணங்களில் 14 அடிக்கு மேல் அகலம் குறிப்பிட்டுள்ளது.

(3) மேற்படி தெருவில் அரசு ஆவணங்களில் தெருவாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றும், மேற்படி தெருவில் பிரதிவாதிகள் வீடும் எங்களது வீடும் உள்ளது என்றால் சரிதான். நான் கிரைய வாங்கியதாக சொன்ன தேதி 30.08.1999 என்றால் சரிதான். எங்களது ஊரில் நத்தம் சர்வே நடைபெற்றதா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது, எனது ஊர் அருப்புக்கோட்டை , தாவா சொத்து உள்ள ஊர் எனது மனைவியின் ஊர். நான் அருப்புக்கோட்டையில் தான் குடியிருக்கிறானா என்றால் கமுதியில் குடியிருந்து வருகிறேன், சனி மற்றும் ஞாயிற்றுகிழமை விடுமுறையில் ஊருக்கு செல்வேன். கமுதியில் குடியேறி எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் 15 வருடங்கள் இருக்கும். நான் state bank of india ல் manager ஆக பணிபுரிந்து வருகிறானா என்றால் தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். தற்போது நான் கமுதியில் குடியிருக்கிறானா என்றால் இல்லை ஓய்வு பெற்ற பின்பு வாகைகுளத்தில் விவசாயம் செய்து வருகிறேன்.

(4) தமிழ்நாட்டில் நத்தம் சர்வே 1991 ல் நடைபெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நத்தம் சர்வேயில் தான் தாவா சொத்துக்கு கிழக்கே உள்ள சொத்தை தெருவாக வகைப்பாடு செய்துள்ளார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் கிரையம் பெற்ற கிழமேல் 41 அடிக்கும் தென்வடல் 44 அடிக்கும் முழுவதுமாக நான் வீடு கட்டியுள்ளேன் என்றால், கிழக்குப்பக்கம் 1 1/2 அடி விட்டு compound wall கட்டியுள்ளேன். எனது வீட்டின் வடக்கே 2 அடிக்கு படிக்கட்டு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். 44 அடிக்கு வடக்கே 2 அடிக்கு படிக்கட்டு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 2 அடி இடம் பிரதிவாதியின் இடத்தில் கட்டியுள்ளோம் என்று பிரதிவாதிகள் சொல்கிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்துள்ள இடம் தெருவாக வகைப்பாடு செய்யவில்லை என்றால் எனது பத்திரத்தில் கிழமேல் பாதை என்று குறிப்பிட்டுள்ளது. எனது பத்திரத்தில் கிழமேல் பாதை என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றும் மேற்படி பாதையில் நடப்பதற்கு பிரதிவாதிகள் இடையூறு செய்யவில்லை என்றால் சரியல்ல.

(5) வாகைகுளம் பொதுமக்கள் யாரும் தாவா சொத்தை பாதையாக புழங்கவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிராம பொதுமக்கள் கிராம பொதுதெரு என்று விளம்புகை செய்யகோரிதான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளாரா என்றால் நாங்கள் தான் தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கில் மற்ற வாதிகள் யாரும் தாவா வழக்கை நடத்தமுன்வரவில்லை என்றும் எனது மனைவி மட்டும் தான் தாவா வழக்கை நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து பொதுதெரு என்று சொல்லி நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளதால், அது பொதுதெரு இல்லாததால் சட்டப்படி நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(6)கிராம பொதுத்தெரு என்று தாவா சொத்தை நாங்கள் சொல்லியுள்ள நிலையில், கிராம பொதுத்தெரு என்று எவ்வித ஆவணங்களிலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளது.

மறுவிசாரணை இல்லை.